செ.வெ.எண்:24/ஜூலை நாள்: 08.07.2019

# பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் பேரவை விதி 110-ன்கீழ், 01.01.2019 முதல் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவது முழுவதுமாக தடை விதிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக், தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் விற்பனை மற்றும் விநியோகம் செய்தலுக்கு 01.03.2019 முதல் அபராத தொகை கீழ்கண்டவாறு நிர்ணயித்து மாநில மற்றும் தருமபுரி மாவட்ட அரசிதழில் (அரசிதழ் எண்.07 நாள்: 26.06.2019)-இல் வெளியிடப்பட்டுள்ளது.

| வ.எண் | விவரம் | முதல் முறை | இரண்டாம் முறை | மூன்றாம் முறை |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | ஒரு முறை பயன்படுத்தும் மற்றும் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் சேமிப்பு, வழங்கல், போக்குவரத்து, விற்பனை மற்றும் விநியோகம் செய்வதற்கு | 25,000 | 50,000 | 1,00,000 |
| 2. | மால்கள், துணி கடைகள் மற்றும் சூப்பர் மார்க்கெட்டுகள் போன்ற பெரிய வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்படுத்தும் மற்றும் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள பயன்படுத்துதல மற்றும் விநியோகம் செய்வதற்கு | 10,000 | 15,000 | 25,000 |
| 3. | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுவனங்களில் ஒரு முறை பயன்பாடுத்தும் மற்றும் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்வதற்கு | 1,000 | 2,000 | 5,000 |
| 4. | சிறிய வணிக விற்பனையாளர்களில் ஒரு முறை பயன்பாடுத்தும் மற்றும் தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்கள பயன்படுத்துதல் மற்றும் விநியோகம் செய்வதற்கு | 100 | 200 | 500 |

இதன்படி, தருமபுரி மாவட்டத்தில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக், தூக்கி எறியும் பிளாஸ்டிக் பொருட்களை மேற்காணும் நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்துவோர் மீது அபராதம் விதிப்பதுடன் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி**